# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097137

1. District : கிருஷ்ணகிரி PS: V&AC Year: 2019 FIR No.: 1/AC/2019 Date: 18.02.19
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: 7(a) of PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 26.12.2018 மதியம் 14.00 மணி
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 13.02.2019
Time Period : Time from : Time to : 18.02.2019 பகல் 12.45 மணி
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 18.02.2019 மதியம் 14.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: கோனேரிப்பள்ளி தொடக்க வேளாண்மை
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் கூட்டுறவு கடன் சங்கம்
சுமார் 30 கி.மீ. கிழக்கு

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி கோனேரிப்பள்ளி சூளகிரி வட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : V. ராஜா சுந்தர் (b) Father's/ Husband's Name : வரதப்பா
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 45 yr (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : அட்டகுறுக்கி கிராமம், கோனேரிப்பள்ளி அஞ்சல்
தொழில் முகவரி சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. ராமசந்திரன், மேலாளர் கோனேரிப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

GCP 240-34(Type-2) 90 000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15/2/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [illegible] 15/2/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.02.19 / 16.00 hrs.

Name: பெயர் S. [illegible]……………………
Rank: நிலை [illegible]……………………

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/AC/2019 சட்டப்பிரிவு 7(a) of PC(Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி வட்டம் அட்டகுறுக்கி கிராமத்தை சேர்ந்த வரதப்பா மகன் திரு.V. ஜெயசங்கர் என்பவர் இன்று 18.02.2019ம் தேதி மதியம் 14.00 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புர் பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் ஆய்வாளர் முன்னிலையில் கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு. நான் கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரிவட்டம் அட்டகுறுக்கி கிராமத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். நான் 12ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்கத் தெரியும் ஆனால் தமிழில் எழுதவராது. விவசாயம் தொழில் செய்துவருகிறேன். எனக்கு சொந்தமாக 4.5 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. என்னுடைய அண்ணார் நாகப்பா என்னவருக்கு 1.5 ஏக்கர் நிலம் உள்ளது. நானும் என் அண்ணன் நாகப்பாவும் கோனேரிப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினராக உள்ளோம். என்னுடைய உறுப்பினர் எண் 1485 ஆகும். என்னுடைய நிலத்தில் தக்காளி பயிர்செய்துள்ளேன். என்னுடைய அண்ணன் பாவக்காய் பயிர் செய்துள்ளார். அதற்காக பயிர்கடன் கேட்டு நானும் என் அண்ணாரும் செயலாளர் ராமசந்திரனை பார்த்து டிசம்பர் 2018-ல் விண்ணப்பம் கொடுத்தோம். 26.12.2018ம் தேதியில் செயலாளர் ராமச்சந்திரன் அவர்கள் எனக்கு தகவல் தெரிவித்து எனக்கு ரூபாய் 95,000/-ம் என் அண்ணன் நாகப்பாவுக்கு ரூபாய் 65,000/- லோன் சேங்ஷனாகிவிட்டதாகவும் சூளகிரியிலுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு வருமாறு தகவல் சொன்னார். நானும் என் அண்ணன் நாகப்பாவும் சூளகிரியிலுள்ள அந்த வங்கிக்கு போனபோது செயலாளர் ராமசந்திரனும் அங்கு வந்தார். வங்கியிலிருந்து எனது வங்கி கணக்கில் ரூபாய் 89149/-ம் என்னுடைய அண்ணாருடைய வங்கி கணக்கில் ரூபாய் 56550/-ம் வரவுவைக்கப்பட்டது. நானும் என் அண்ணன் நாகப்பாவும் வங்கியிலிருந்து கீழே வந்தபோது, மதியம் சுமார் 2.00 மணிக்கு செயலாளர் ராமசந்திரன் எங்களுடன் கீழேவந்து, மீதமுள்ள தொகைகளுக்கு சொசைட்டிமூலம் உரம் வழங்கப்படும் என்று சொல்லி, எங்களுக்கு லோன் கொடுத்ததற்காகவும், உரமாக வழங்குவதற்காகவும் இருவருக்கும் சேர்த்து ரூபாய் 5000/- தனக்கு தனியாக கொடுக்கவேண்டும் என்று கேட்டார். அவ்வளவு பணம் கொடுக்கமுடியாது என்று சொன்னேன். மீண்டும் அவர் எங்களை கோனேரிப்பள்ளியிலுள்ள சொசைட்டிக்கு அழைத்துச்சென்று சில

ரிஜிஸ்டர்களில் கையொப்பம் வாங்கிக்கொண்டார். நாங்கள் புறப்படும்போது, ரூபாய் 5000/- கொடுத்தால்தான் உரம் கொடுக்கமுடியும் என்று செயலாளர் சொன்னார். பிறகு 13.02.2019ம் தேதி என்னுடைய அண்ணார் மகன் வேணுகோபால் அந்த சொசைட்டிக்கு சென்று செயலாளர் ராமசந்திரனிடம் உரம் வழங்கும்படி கேட்டுள்ளார். அதற்கு அவர் ஏற்கனவே பணம் 5000/- கொடுக்குமாறு உங்க அப்பாவிடமும் சித்தப்பாவிடமும் சொல்லியிருக்கிறேன். அந்த பணத்தை கொடுத்தனுப்பியுள்ளார்களா என்று கேட்டுள்ளார். அதற்கு என் அண்ணன் மகன் வேணுகோபால் அதெல்லாம் எனக்கு தெரியாது அவசரமாக விவசாயத்திற்கு உரம் தேவைப்படுகிறது அதற்காகத்தான் வந்துள்ளேன் என்று சொன்னதால், 2 மூட்டை டிஏபி மற்றும் 2 மூட்டை காம்ப்ளக்ஸ் உரத்தையும் அவரிடம் கொடுத்தனுப்பியுள்ளார். பிறகு, 18.02.2019ம் தேதி பகல் சுமார் 12.45 மணிக்கு கோனேரிப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு சென்று செயலாளர் திரு.ராமசந்திரன் அவர்களை சந்தித்து எங்களுக்கு வழங்கவேண்டிய மீதி உரத்தை வழங்குமாறு நான் கேட்டேன். அதற்கு அவர் தான் ஏற்கனவே கேட்ட பணம் ரூபாய் 5000/-ஐ கொடுத்தால்தான் உரம் வழங்க முடியும் என்று உறுதியாக சொன்னார். அதனால் நான் திரும்பி வந்துவிட்டேன். அவருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எங்களுக்கு வரவேண்டிய உரத்தை பெறுவதற்கு எங்களுக்கு விருப்பமில்லை. செயலாளர் ராமசந்திரன் லஞ்சமாக கேட்ட பணம் ரூபாய் 5,000/-த்துடன் இன்று அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, அவர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். படித்துப்பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு, sd/-xxxxxxxx (ஜெயசங்கர்) 18.02.2019. ஐயா, வாக்குமூல புகாரை இன்று 18.02.2019ம் தேதி 14.00 மணிமுதால் 14.20 மணிவரை அலுவலக கணினியில் என்னால் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் அச்சு பிரதியெடுக்கப்பட்டு அவரிடம் கொடுத்து படித்துபார்க்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர் அதை படித்துப்பார்த்து சரியென ஒப்புக்கொண்ட பின்னர், அந்த புகார் வாக்குமூலத்தில் அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது. பிறகு, புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் எதிரியின் நற்பெயர் குறித்த விவரங்கள் மற்றும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்த விவரங்கள் மதியம் 14.25 மணிமுதல் 14.40 மணிவரை என்னால் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த விசாரணையில் புகார்தாரரின் முன்நடத்தை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதென்றும்

எதிரியின் நற்பெயாட சரியில்லை என்றும் அவர்கள் இருவருக்கும் தனிப்பட்ட விரோதமில்லை என்றும் தெரியவந்ததால் புகாரின் தன்மைப்படி இன்று 18.02.2019ம் தேதி பகல் 14.45 மணிக்கு எதிரிமீது கிருஷ்ணகிரி கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 1/AC/2019 u/s 7(a) of Prevention of Corruption(Amendment) Act, 2018-படி தகவலறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவலறிக்கையின் அசலையும், புகாரையும் கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

18/02/19

Inspr
V&AC, Krishnagiri